# தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2010

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குப் பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 18 இன் பிரகாரம் 05 வருடங்களில் பெறுமானத் தேய்வு செய்யவேண்டியிருந்த போதிலும் இலங்கை காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கணனிகள் 06 வருடங்களில் பெறுமானத் தேய்விடல் கொள்கையொன்று பின்பற்றப்பட்டிருந்தது.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2002 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் அரசாங்க மானியமாகக் கிடைத்த முறையே ரூபா 267,600 மற்றும் ரூபா 451,590 தொகையான அலுவலக உபகரணங்களின் கிரயப் பெறுமதிகள் உரிய வருடங்களின் அரசாங்க மானியமாக இனங்காணப்பட்டு இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 24 இன் பிரகாரம் 8 வருடங்களிலும் 6 வருடங்களிலும் முறையே ரூபா 33,450 மற்றும்

ரூபா 75,265 என்ற தொகைகள் வருடாந்தம் வருமானத்திற்கு எடுக்கவேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் செயற்படாமல் 2010 ஆம் ஆண்டின் போது அதுவரை கூட்டுச் சேர்ந்த திரண்ட தொகையான ரூபா 434,860 தொகையானது வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 326,145 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 187,756,188 தொகையான சலுகை நிபந்தனை கடன் மீதியை அறவீடு செய்தலின் முன்னேற்றம் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 5,574,107,464 கூட்டுப்பெறுமதியான முதலீடுகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்ளுடனான இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| நிதிப் பிரமாணம் 757(2) | மீளாவாண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவராண்மைச் சுற்றுநிருபத்தின் 4.2 ஆம் பந்தி | நிதியத்தினால் பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.6 மோசடியான / முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

களஞ்சிய முகாமையாளருக்கு போக்குவரத்துப் படிகள் செலுத்தும் போது அந்த உத்தியோகத்தரின் பெயரில் காசோலை விநியோகிக்கப்படாமல் வேறொரு உத்தியோகத்தரின் பெயரில் காசோலை வழங்கப்பட்டதன் பின்னர் அந்த உத்தியோகத்தரினால் கிளை முகாமையாளரின் கணக்கிற்கு பணம் வைப்புச் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவு ரூபா 2,330,614,859 மிகையாக இருந்ததுடன் 2009 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மிகை ரூபா 3,202,833,204 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்றபோது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளின் ரூபா 872,218,345 ஆன வீழ்ச்சிக்கு தேறிய காப்புறுதித் தவணை வருமானம் குறைவடைந்தமை, பதவியணியினர் செலவினங்களின் அதிகரிப்பு போன்ற விடயங்கள் தாக்கமளித்திருந்தன.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் என்பவற்றின் பிரகாரம் நிதியத்தில் 39 பதவிகள் மிகையாகக் காணப்பட்டதுடன் ஒரு முகாமைத்துவப் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரமின்றி 2010 ஆம் ஆண்டில் 42 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டு

சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 796,000 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் தகைமைகளைப் பூர்த்திசெய்யாத இரண்டு கிளை முகாமையாளர்களுக்கு 2010 ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 137,000 செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ஆறு உத்தியோகத்தர்களின் பெயர்வழிக் கோவை பரீட்சிப்பின் போது கல்வித் தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சட்ட உத்தியோகத்தர் பதவி காணப்படாதிருந்த போதும் ரூபா 25,640 படி மூன்று மாதங்களுக்காக இரண்டு சட்ட உத்தியோகத்தர்களுக்காகவும் ரூபா 25,000 தொகையில் ஒரு மாதத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட சட்ட உத்தியோகத்தருகாகவும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**2.2.2 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

நிதியத்தின் அலுவலகத்தை வேறு இடமொன்றுக்குக் கொண்டு செல்கின்றமையால் அதுவரையில் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் கட்டிடத்தை புனரமைப்புச் செய்வதற்காக ஏற்பட்ட ரூபா. 14,102,286 தொகையானது ஒரு விளைவற்ற செலவாக இருந்தது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீட்டுக் கொள்கைகளும் வெளிப்படுத்தல்களும்
(ஆ) பதவியணியினரின் ஆட்சேர்ப்பு
(இ) செயலாற்றல்